18.03.2025 அ.வ. எண்.149/2015 பி.சா.1 பிரபு

<u>**குறுக்கு விசாரணை**</u>

என் தாத்தா பெயர் கிஷ்டப்பிள்ளை. பாட்டி பெயர் கண்ணம்மாள். கிஷ்டப்பிள்ளை, கண்ணம்மாளுக்கு சீனிவாசன், ராஜா மகன்களும், தனபாக்கியம், காந்தாமணி மகள்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். தனபாக்கியம் 1978 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். தனபாக்கியத்தின் வாரிசுகள்தான் வாதியும், 3 முதல் 7 பிரதிவாதிகளும் என்றால் சரிதான். கிஷ்டப்பிள்ளை 1998 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். கண்ணம்மாள் 1997 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். கிஷ்டப்பிள்ளை கண்ணம்மாள் வாரிசுகள் என் தகப்பனார் சீனிவாசன், 1,2 பிரதிவாதிகளும் மற்றும் தனபாக்கியத்தின் வாரிசுகளான வாதியும், 3 முதல் 7 பிரதிவாதிகளும் ஆவார்கள். கிஷ்டப்பிள்ளை கண்ணம்மாள் இறந்தபிறகு 2ம் பிரதிவாதி காந்தாமணி பாகம் கோரி அ.வ.எண். 236/2007 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அ.வ.எண். 236/2007 வழக்கை காந்தாமணி என் தகப்பனார் சீனிவாசன், 1ம் பிரதிவாதி ராஜா, தனபாக்கியத்தின் வாரிசுகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்தார். அ.வ.எண். 236/2007 வழக்கு நிலுவையில் இருந்தபோது தான் என் தகப்பனார் இறந்துவிட்டார். அதன்பிறகு எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டு வழக்கை முடித்துக்கொள்ளலாம் என பேசப்பட்டு வழக்கும் முடிந்துவிட்டது. அ.வ.எண். 236/2007 வழக்கில் இவ்வழக்கின் வாதி 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருந்தார் என்றால் இல்லை. வாதி பணம் வாங்கிக்கொள்வதாக சொன்னார், ஆனால் பணம் வாங்கவில்லை. அ.வ.எண். 236/2007 வழக்கு நிலுவையில் இருந்தபோது என் தகப்பனாரும் 1ம் பிரதிவாதி ராஜாவும் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பாகப்பிரிவினை ஆவணம் வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்பட்டதாலும், நடைமுறைக்கு வரவில்லை என்பதாலும் அதை ரத்து செய்துவிட்டோம். வாதி பாகம்கோரி 16.08.2011 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 13.09.2011 ஆம் தேதி வாதி என்னுடைய தாயாருக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பாகம்கோரி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

13.09.2011 ஆம் தேதி வாதி சார்பதிவாளரிடம் பிரதிவாதிகள் பத்திரம் பதிவு செய்ய வந்தால் பதிவு செய்யக்கூடாது என ஆட்சேபனை மனு அளித்து அதன் நகலை எங்களுக்கும் அனுப்பினார் என்றால் தெரியவில்லை. 09.12.2011 ஆம் தேதி நாங்கள் பி.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 வாதி பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 பட்டா வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்பட்டது என்றால் சரியல்ல, அதற்கு முன்பே இருந்தது. பி.சா.ஆ.2 பட்டா வழக்கு நிலுவையில் இருந்தபோது ஏற்பட்டது என்பதால் பட்டா ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் 17ம் பிரதிவாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான், அந்த விவரம் வாதிக்கும் தெரியும். 17ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிக்கு சொத்து, பணம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, என் அத்தை வாங்கிக்கொண்டார். என் அத்தை வாங்கிக்கொண்டார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. என் அத்தை தனபாக்கியத்திற்கு 30 சவரன் நகை போட்டார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது, என் தகப்பனார் சொல்லி தான் தெரியும். வாதியின் தகப்பனார் சொந்தஊர் நாவல். வாதியின் தகப்பனாருக்கு நாவல் கிராமத்தில் கொஞ்சம் நிலம் இருந்தது. வாதியின் தகப்பனார் நாவல் கிராமத்தில் இருந்த சொத்துக்களை விற்றுவிட்டு கீழாத்தூர் கிராமத்திற்கு வந்தார் என்றால் சரிதான், கொஞ்சம் சொத்து தான் இருந்தது. வாதியின் தகப்பனார் ஆரிமுத்து பிள்ளைக்கு என் தாத்தா தான் கீழாத்தூர் கிராமத்தில் 8 ஏக்கர் நிலம் வாங்கிக்கொடுத்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை. என் தாத்தா வாதியின் தகப்பனார் பெயரில் நிலம் வாங்கி கொடுத்தாரா அல்லது தனபாக்கியம் பெயரில் நிலம் வாங்கி கொடுத்தாரா என்று தெரியாது. என் தாத்தா வாங்கிக்கொடுத்ததாக சொல்வது கேள்விபட்டு தான் தெரியும். என் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் 2010 ஆம் ஆண்டு ஏக்கர் 1.77 1/2 கிரயம் செய்தபோது தனபாக்கியத்தின் வாரிசுகளுக்கு

ரூ.2,20,000/- ரொக்கமாக கொடுக்கப்பட்டதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதாரம் உள்ளது. 3 முதல் 7 பிரதிவாதிகள் ஒப்புதல் ரசீது எழுதிக்கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இருக்கிறது. வாதி பணம் பெற்றுக்கொண்டதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அவர் பணம் வாங்கிக்கொள்வதாக சொல்லிவிட்டு விற்றபிறகு வந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் சொத்துக்களை விற்பனை செய்தது வாதிக்கு தெரியும் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கிரயம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தனபாக்கியத்தின் வாரிசுதான் வாதி என்றும் வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/24 பாகம் உள்ளது என்றும் அந்த பாகத்தை நாங்கள் வாதிக்கு பிரித்துக்கொடுக்க கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல. வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றும் வாதி வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.